# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.282/2024 | Date | : 09.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : சங்ககிரி |
| Name | : லட்சுமணன் | Calling | : தறித்தொழில் |
| Father Name | : மாணிக்கம் | Religion | : இந்து |
| Village | : மகுடஞ்சாவடி | Age | : - |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.07.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி, கோட்டைமேட்டில் வசித்து தறிதொழில் செய்து வருகிறேன். கடந்த 15-05-2023 ம் தேதி, இரவு சுமார் 09.00 மணிக்கு மேல் காளிப்பட்டி பிரிவு அருகே கார் ஒன்று நின்றுகொண்டிருந்த லாரிமீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. மறுநாள் காலை சுமார் 07.45 மணியளவில் நான் சம்பவ இடத்தில் இருந்தபோது, அங்கு நடந்த விபத்து சம்பந்தமாக விசாரித்துகொண்டிருந்தனர்.

2) போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், தனுஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2வது சாட்சி கையொப்பம் தனுஷ்

என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1) விபத்து நடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 06 கி.மீ தூரம் இருககும். விபத்தில் இறந்தவர் எனது நண்பர் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு காலையில் தான் தெரியும் என்றால் சரிதான். சேலம் to கோவை செல்லும் சாலையில் காளிப்பட்டி பிரிவு ரோடு மேம்பாலத்தில் இருந்து கீழே இறக்கும்போது இடதுபுறம் உள்ள சர்வீஸ் ரோடு தேசிய நெடுஞ்சாலையில் இணையும் என்றால் சரிதான். அதனை மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

2) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,

Sd/-Lakshmanan

Judicial Magistrate No.1,
Sankari.